DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 82/2015 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 11 | Caste | : |
| Name | : செல்வம் | Calling | : |
| Father / Husband Name | : சோமு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 26th August 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் மதுரை கட்டபொம்மன் நகரில் வசித்து வருகிறேன். பில்டிங் கான்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கருப்புசாமி என் அண்ணன் மகன் ஆவார். கருப்புசாமி பாஸ்ட்ராக் வண்டியில் ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வந்தார். கடந்த 31.08.2014 ம் தேதி மாலை 04.00 – 05.00 மணியளவில் எனக்கு மேற்படி விபத்து குறித்து போன் மூலம் தகவல் வந்தது. தகவல் வந்தவுடன் நான் சிவகங்கை அரசு மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கில் வைத்து கருப்பசாமியைப் பார்த்தேன்.

2) காளையார்கோவிலில் ஒரு விஷேசத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது எதிர் திசையில் வந்த டாடா ஏசி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். மறுநாள் கருப்புசாமியின் பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

எனக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் சரியாக ஞாபகமில்லை. டாடா ஏசி வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது என யார் எனக்கு சொன்னது

SELVAM P Digitally signed by SELVAM P Date: 2025.08.26 12:18:01 +0530

என்றால் அங்கிருந்தவர்கள் சொன்னார்கள் குறிப்பிட்டு யார் என்று எனக்கு ஞாபகமில்லை. இறந்த நபர் என் அண்ணன் மகன் என்பதால் நான் சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.26 12:18:16 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 82/2015 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 12 | Caste | : |
| Name | : கருணாநிதி | Calling | : |
| Father / Husband Name | : சோமு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 26th August 2025.

---------------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் மதுரை நரிமேடு கட்டபொம்மன் நகரில் வசித்து வருகிறேன். பில்டிங் கன்ஸ்ட்ரக்சன் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கருப்புசாமி என் அண்ணன் மகன் ஆவார். கருப்புசாமி பாஸ்ட்ராக் வண்டியில் ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வந்தார். கடந்த 31.08.2014 ம் தேதி மாலை 05.00 – 06.00 மணியளவில் எனக்கு மேற்படி விபத்து குறித்து போன் மூலம் தகவல் வந்தது. தகவல் வந்தவுடன் நான் சிவகங்கை அரசு மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கில் வைத்து கருப்புசாமியைப் பார்த்தேன்.

2) காளையார்கோவிலில் ஒரு திருமண விஷேசத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது முத்துப்பட்டி அருகே எதிர் திசையில் வந்த மேக்சி கேப் வாகனத்தை ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து மோதி

SELVAM P
Digitally signed by SELVAM P
Date: 2025.08.26 12:18:37 +0530

விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். மறுநாள் காலை கருப்புசாமியின் பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

யாருடைய திருமண நிகழ்ச்சிக்கு யார் யாருடன் கருப்புசாமி சென்றார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றாலும் அந்த வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணம் செய்தார்கள் என்ற விவரமும் எனக்குத் தெரியாது என்றாலும் சரிதான். எனக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் மதுரையிலிருந்து எந்த வழியாக மருத்துவமனை வந்தேன் என்றால் பூவந்தி வழியாக வந்தேன். நான் சம்பவம் இடம் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. முத்துப்பட்டி எங்குள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல நான் வரும் வழியில் தான் உள்ளது. நான் சொல்வது போல் எதிரி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கவில்லை என்றாலும் எனது அண்ணன் மகனான கருப்புசாமி தான் வாகனத்தை அதிவேகமாக இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல. எதிரி சாலை விதிகனை முறையாக கடைப்பிடித்து மெதுவாகத்தான் இயக்கினார் என்றால் சரியல்ல. இறந்த நபர் என் அண்ணன் மகன் என்பதால் நான் விபத்து இழப்பீடு வழக்கிற்காக சம்பவத்தை கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.08.26 12:18:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.